

விருதுநகரில் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் சரஸ்வதி திருமண மண்டபத்தில் தலைவர் செல்வமணி தலைமையில் நடைபெற்றது. இதில் தெற்கு மாவட்ட திமுக செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், எம்.எல்,ஏ, வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தங்கம் தென்னரசு, எம்.எல்.ஏ.ஆகியோர் கழகத்தினருக்கு விளக்க உரை ஆற்றினார்கள். உடன் சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் கடற்கரை ராஜ், குன்னூர் சீனவாசன், தென்காசி பாராளமன்ற உறுப்பினர் இராணி ஸ்ரீ குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.ராஜன், தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி அமைப்பாளர் முன்னாள் எம்.பி.தனுஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப்புராஜா, சிவப்பிரகாசம், பொருளாளர்கள் சாகுல் ஹமீது, ஆர்.வி.கே.துரை, ஒன்றியச் செயலாளர் மல்லி ஆறுமுகம், நகரச் செயலாளர்கள் ஏ.கே.மணி, எஸ்.ஆர். எஸ்.தனபாலன், அய்யாவு பாண்டியன், செட்டிக்குறிச்சி கே.வி.கே.பிராபகரன், பொதுக்குழு உறுப்பினர் நவநீதன், தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி மேம்பாட்டு அணி இராஜகுரு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ், இராஜபாளையம் உதுமான் ஆகியோர் இருந்தனர்.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

தேனி தெற்கு மாவட்டக் கழக செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் அறிவிப்பின்படி தேனி தெற்கு மாவட்டம், ஆண்டிப்பட்டி சட்டமன்ற தொகுதி கள ஆய்வுக் கூட்டம் திருமதி.அஞ்சுகம் பூபதி, துணை மேயர், தஞ்சை மாநகராட்சி, பிரபு கஜேந்திரன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஆகியோர் தலைமையில் கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது.

| சட்டமன்ற தொகுதி | நாள் | இடம் |
|---|---|---|
| ஆண்டிப்பட்டி | 24.05.2026 ஞாயிற்றுக்கிழமை நேரம் : காலை 09.00 மணி முதல் பகல் 12.30 மணி வரை | பத்ரகாளியம்மன் திருமண மண்டபம் கடமலைக்குண்டு (கடமலை - மயிலை வடக்கு மற்றும் தெற்கு ஒன்றியம் மட்டும்) |
| | 24.05.2026 ஞாயிற்றுக்கிழமை நேரம் : மதியம் 01.00 மணி முதல் | பாண்டியன் மீனாட்சி திருமண மஹால், EB ஆபீஸ் அருகில், தேனி ரோடு, ஆண்டிபட்டி, (ஆண்டிபட்டி கிழக்கு, மேற்கு ஒன்றியம், கம்பம் ஒன்றியம், கூடலூர் நகரம்) |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 21.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

# 8,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்தது 'மெட்டா' நிறுவனம்!

## பேரதிர்ச்சியில் ஊழியர்கள்!

*புதுடெல்லி, மே 22 - மெட்டா ஊழியர்களுக்கு நேற்று முந்தினம் இன்று அனைவரும் வீட்டில் இருந்தே பணிபுரியுங்கள்' என்ற ஒரு சாதாரண உத்தரவுடன் தொடங்கியது. அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட பல்வேறு பிராந்தியங்களில் உள்ள ஊழியர்கள் அலுவலகத்திற்கு வர வேண்டாம் என்று மெட்டா நிறுவனம் அறிவித்தது.*

*இதனால் அவற்றின் வளாகங்களில் மக்கள் கூட்டம் இல்லை; அலுவலக அறைகளில் அரட்டைகள் இல்லை; வளாகத்தின் தாழ்வாரங்களில் ஊழியர்களின் பரபரப்பான நடமாட்டமும் இல்லை.*

*அதன் தொடர்ச்சியாக, ஊழியர்களின் மின்னஞ்சல் பெட்டிகளுக்கு அடுத்தடுத்து செய்திகள் வரத் தொடங்கின. மெட்டா பிளாட்பார்ம்ஸ் நிறுவனம், தனது ஒட்டு மொத்தப் பணியாளர்களில் சுமார் 10 சதவீதம் ஊழியர்களை (8,000) பணிநீக்கம் செய்யும் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.*

*இதற்கான முதல் அறிவிப்பு, சிங்கப்பூ ரில் உள்ள அதன் முக்கிய மையத்திலிருந்து வெளியானது.*

*சிங்கப்பூர் உள்ளூர் நேரப்படி அதிகாலை 4 மணிக்கு (இந்திய நேரப்படி நள்ளிரவு 1:30 மணி) பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு மின்னஞ்சல்கள் அனுப்பப் பட்டதாக 'புளூம் பெர்க்'செய்திநிறுவனம் தெரிவித்துள்ளது.*

*உலகளாவிய நேர மண்டலங்களுக்கு ஏற்ப, அடுத்தடுத்த கட்டங்களாக இந்த பணி நீக்க அறிவிப்புகள் ஊழியர்களுக்கு அனுப் பப்பட்டு வருகின்றன.*

*முதலில் வீட்டில் இருந்தே பணி செய்ய உத்தரவிட்டு, அதைத் தொடர்ந்து பணிநீக்க நடவடிக்கையை மேற்கொண்ட மெட்டாவின் இந்த உத்தி ஐ.டி. உலகில் பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது.*

*இதன் பின்னணியில் செயற்கை நுண்ணறிவு மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இருப்பதாக கூறப்படுகிறது.*

*இந்த பணிநீக்க நடவடிக்கைக்கு முன்பு மெட்டா நிறுவனத்தில் சுமார் 78,000 ஊழியர்கள் பணியாற்றி வந்தனர்.*

*இந்த நிலையில்தான் தற்போது ஆயிரக்கணக்கானோர் பணிநீக்கம் செய்யப்பட்டு வருகின்றனர்; மேலும் பல ஆயிரம் ஊழியர்கள் வேறு பிரிவுகளுக்கு மாற்றப் பட்டு வருகின்றனர்.*


**6000 காலி இடம் முடக்கம்!**

*இதுகுறித்து அந்நிறுவனத்தின் முதன்மை மனிதவள அதிகாரி ஜானெல்லே கேல் ஊழியர்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:*

*7,000 ஊழியர்கள் செயற்கை நுண்ணறிவு சார்ந்த புதிய குழுக்களுக்கு மாற்றப்படுவார்கள். காலியாக இருந்த சுமார் 6,000 பணியிடங்கள் முடக்கப் பட்டுள்ளன.*

*மேலாண்மை நிலைகளில் உள்ள அதிகாரிகளின் அடுக்குகள் குறைக்கப்படுகின்றன. மேலும், குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களைக் கொண்ட சிறிய குழுக்கள் மூலம், மிக விரைவாகவும் தன்னாதிக்கத்துடனும் செயல்படக்கூடிய எளிய நிறுவனக் கட்டமைப்பை நோக்கி நாம் நகர்ந்துள்ளோம்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*





**10. 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் கடந்த 5 ஆண்டுகளில் தொடர்ந்து படிப்படியாக அதிகரித்த தேர்ச்சி விகிதம்**

# காட்டுத் தீக்கான காரணங்கள் அறியப்படாமல் இருக்கலாம்; ஆனால்

# காட்டுத்தீ இயல்பாகவே அணைந்துவிடும் அல்லது அணைக்கப்படும்!

**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை
செயல் திட்டக்குழு உறுப்பினர்



திராவிட முன்னேற்றக் கழகம் 1949-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17ஆம் நாள் திராவிட கழகத்திலிருந்து பிரிந்து பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்டது என்பது வரலாறு. திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு இயக்கமாக என்றைக்கும் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்ற தொலைநோக்குச் சிந்தனையில்தான், பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகக் கட்டமைப்பைப் பொருத்தமாக உருவாக்கினார். பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பின்னர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கழகக்கோட்டையை வலுப்படுத்தினார்-பாதுகாத்தார்.

கழகம் தொடங்கி 18 ஆண்டுகால நிறைமுடிவில் தமிழ்நாட்டின் சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தி.மு.க. ஆட்சி அமைந்தது. பேரறிஞர் அண்ணாவின் குறுகியகால ஆட்சியில் மூன்று முக்கிய சமுதாய - அரசியல் மாற்றங்களைப் பிரதிபலிக்கும் சட்டங்களை உருவாக்கினார்கள். சுயமரியாதை திருமண அங்கீகாரத்திற்கான சட்டம், தமிழ்-ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கைக்கான சட்டம், சென்னை மாகாணம் என்பதை மாற்றி "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டிய சட்டம். இந்த மூன்று சட்டங்கள் என்றும் மறக்க முடியாத-மறைக்கமுடியாதவரலாற்றுப்பதிவுகளாகும்.

பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பின்னர் முதலமைச்சர் பொறுப்பேற்று ஆட்சி அமைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பட்டியலின-பிற்படுத்தப்பட்ட சமூகங்க ளின் கல்வி - வேலை வாய்ப்புகளில் ஒதுக்கீடு கள், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் "சமத்துவ புரங்கள்", மாநில சுயாட்சிக் கான குழுவமைத்து, அவர்களது அறிக்கையினை ஆவணப்படுத்தி, மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற கோட்பாட்டை இந்திய ஒன்றியத்தில் அடங்கிய அனைத்து மாநிலங்களிலும்விழிப்புணர்ச்சியைஉருவாக்கினார். ஜனநாய கத்தைப் பாதுகாக்கும் வகையில், இந்திரா காந்தியின் அவசரகால நிலைமைப் பிரகடனத்தை எதிர்த்து முறியடித்தார். இப்படி எழுதிக்கொண்டே போகலாம்.

முத்தமிழறிஞர் கலைஞரின் மறைவிற்குப் பின்னர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் கழகத்தை வளர்த்ததோடு கால மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையில் "திராவிட மாடல்" ஆட்சி முறையை திட்டமிட்டு "எல்லோருக்கும் எல்லாம்" என்ற சமூகநீதிக் கோட்பாட்டின் அடிப்படை யில், கல்வி-சுகாதாரம்-பெண்ணுரிமை ஆகிய உரிமைகள், வாய்ப்புகள், வசதிகள் ஆகியவை அடித்தட்டு மக்களுக்கும் எளிதில் கிடைக்கும் வகையில், சட்டங்களையும், திட்டங்களையும் உருவாக்கி வரலாற்றுச் சாதனை படைத்தார்கள். இந்திய ஒன்றியமே வியப்புற்று வியந்து பாராட்டும் அளவிற்கு இந்திய அரசியல் அரங்கத்தில் உயர்ந்து நின்றார் - இனியும் நிற்பார் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

கடந்த காலங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி, அதிகாரங்களைப் பெற்ற நிலையில், தமிழ்நாட்டு மக்களுக்கு சாதித்துக் காட்டிய சாதனைகள் என்பது அளப்பரியது. இந்த சாதனைகளையும் கடந்து, உலகிலேயே மிகப்பெரிய "ஜனநாயக நாடு" எனக் கருதப்படும் இந்திய ஒன்றியத்தில், ஜனநாயகத்திற்கு மிகப்பெரிய அளவில் சோதனை உருவாக்கப்பட்ட காலகட்டத்தில் இந்திய அளவில் மிகப்பெரிய போராட்டக் களங்களை அமைத்து இந்திய ஜனநாயகத்தைக் காப்பாற்றிய பேரியக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பது இந்திய வரலாற்றில் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆங்கிலேயரிட மிருந்து விடுதலைப் பெற்ற இந்திய ஒன்றியப் பகுதியிலுள்ள மாநிலங்கள் தன்னாட்சி பெற்றமாநிலங்களாகவும், மத்தியில்கூட்டாட்சியாகவும் அமைந்து செயல்பட உரிய அரசியல் அதிகாரப் பகிர்வு வேண்டும் என்கின்ற அனைத்து மாநிலங்களுக்கான போராட்டத்தை முன்னெடுத்து தொடர்ந்து அந்தப் போராட்டத்திற்கு நாடு முழுவதும் வலிமை சேர்த்துக் கொண்டிருக்கும் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை யாராலும் எளிதில் மறந்துவிட முடியாது.

இந்திய ஒன்றியத்தில் சமூக அவலங்களை அடியோடு ஒழிக்க வேண்டும். தமிழ்நாட்டில் ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும் என்பதன் தொடக்கமாக அனைத்து சமூக பிரிவினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தை நிறைவேற்றி அமல்படுத்திய சமூகப் புரட்சியாளர்கள் இயக்கம் தான் தி.மு.க.!! இங்குள்ள தமிழர்களுக்கு மட்டுமல்லாமல் உலகளாவிய தமிழர்களுக்கும் குறிப்பாக, இலங்கை வாழ் தமிழர்களின் அனைத்து கோரிக்கைகளுக்கும் துணை நின்றதோடு அதற்கான களத்தை தமிழ்நாட்டில் அமைத்துக் கொடுத்து அதற்கு விலையாக திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சியையே பறி கொடுத்தது என்பதோடு, இந்திய நாட்டின் ஜனநாயகத்தைக் காப்பதற்காகவும் திராவிட முன்னேற்றக் கழகம் தன் ஆட்சியை விலையாகக் கொடுத்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணித் தலைவர்களும், தொண்டர்களும் பல்லாயிரக்கணக்கில் பலமுறை சிறை சென்று தமிழ் மக்களின் உரிமைகளைக் காத்த இயக்கம் என்பதை தமிழ்ப் பெருங்குடி மக்கள் இனியாவது எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம் தாய்த்தமிழ் மொழி காக்க இந்தித்திணிப்பை எதிர்த்து, தங்கள் தேக்குமர தேகங்களில் தீயிட்டுக் கொண்டு மாண்ட வரலாற்றை உலகம் வியக்க உருவாக்கியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீரர்கள் என்பதை இன்றைய இளைஞர்களுக்கு நினைவுபடுத்துவது ஒவ்வொருவரது தலையாயக் கடமையாகும். இப்படி குருதி தோய்ந்த தியாக வரலாறு உலக வரலாற்றில் சில இயக்கங்களுக்குத்தான் உண்டு என்பதையும் இந்த கட்டுரையின் மூலம் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கு நான் தெரிவித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனைகளின் பெருவெள்ளத்தின் சிறுதுளிகள் மட்டும்தான் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

எனவே திராவிட முன்னேற்றக் கழகம் எத்தகைய அரசியல் சூழ்நிலைகள் உருவானாலும் அதனை எதிர்கொண்டு சந்திக்கும், சமாளிக்கும், வெற்றி கொள்ளும் என்பது மட்டும் உறுதி. காட்டில் உருவான பெரும்நெருப்பிற்கு காரணங்கள் அறியப்படாமல் இருக்கலாம். ஆனால், அந்த காட்டுத்தீ இயல்பாகவே அணைந்துவிடும் அல்லது அணைக்கப்படும் என்பது மட்டும் உறுதி.

இந்த உணர்வோடும் உணர்ச்சியோடும் நமது இயக்க வழித்தடத்தில் குறுக்கிடும் நச்சுக்கொடிகள் அடையாளம் கண்டு அப்புறப்படுத்திவிட்டு திராவிட இயக்கத்தின் வழித்தோன்றல் வழிகாட்டும் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில் புதிய உணர்வோடும், உத்வேகத்தோடும் அணி வகுப்போம்! வெற்றி காண்போம் வாரீர்!!

# இந்திய பொருளாதார வளர்ச்சியை 6.4% ஆக குறைத்தது ஐ.நா.!

*புதுடெல்லி, மே.22- மேற்கு ஆசிய போர் பதற்றத்தால் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பாதிப்புகளைக் சுட்டிக்காட்டி, இந்தியாவின் 2026ம் ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி (ஜிடிபி) மதிப்பீட்டை ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா.) 6.4 சதவீதமாகக் குறைத்துள்ளது. முந்தைய கணிப்பில் இது 6.6 சதவீதமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.*

*எனினும், உலகளவில் மிக வேகமாக வளர்ந்து வரும் முக்கியப் பொருளாதார நாடுகளின் வரிசையில் இந்தியா தொடர்ந்து முன்னிலையில் நீடிப்பதாக ஐ.நா.வின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. மேற்கு ஆசிய நெருக்கடியானது உலகப் பொருளாதாரத்துக்கு மேலும் ஒரு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அந்த அறிக்கை, இதன் காரணமாக உலகளாவிய பொருளாதார வளர்ச்சி மந்தமடைந்துள்ளதாகவும், பணவீக்க அழுத்தம் மீண்டும் அதிகரித்துள்ளதாகவும் விவரித்துள்ளது.*

*இதுகுறித்து ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறையின் உலகளாவிய பொருளாதாரக் கண்காணிப்புப் பிரிவின் மூத்த பொருளாதார நிபுணர் இங்கோ பிட்டர்லே செய்தியாளர்களிடம் கூறும்போது, "2025ம் ஆண்டில் 7.5 சதவீதமாக இருந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி, 2026ல் 6.4 சதவீதமாகக் குறையும் என கணிக்கப்பட்டுள்ளது. அதிக எரிசக்தி இறக்குமதிச் செலவுகள் மற்றும் உலகளாவிய நிதி நெருக்கடியின் தாக்கத்தை பிரதி பலிப்பதாகவே இது அமைந்துள்ளது" என்றார்.*

# சட்டமன்றத்தொகுதி-களஆய்வு!

கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் **அன்பில் மகேஷ் பொய்யாமொழி** அறிவிப்பின்படி, திருச்சி தெற்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக் குழுவினர் கழக சட்டத்துறை செயலாளர் **இரா.கிரிராஜன்** எம்.பி., மாணவர் அணி துணை செயலாளர் **அப்துல் மாலிக்** ஆகியோர் அடங்கிய கள ஆய்வுக்குழுவினர். திருச்சிராப்பள்ளி தெற்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில், தொகுதி வாரியாக கீழ்க்கண்ட பட்டியல் உள்ளவாறு ஆய்வு மேற்கொள்ள உள்ளனர்.

| வ.எண் | தேதி | சட்டமன்ற தொகுதி | கள ஆய்வு நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1. | 25/05/2026 | திருவெறும்பூர் | மாவட்ட அலுவலகம் |
| 2. | 26/05/2026 | திருச்சி கிழக்கு | மாவட்ட அலுவலகம் |
| 3. | 27/05/2026 | மணப்பாறை | ஆர்மோன்ஸ் மஹால், மணப்பாறை |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 20.5.2026

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**